**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure).**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, KARUR**
**CC .No.28/2023**

Deposition of Witness : DW3

| | | | |
|---|---|---|---|
| Name | நாகராஜ் | Taluk | |
| Father's Name | சந்திரன் | Village | |
| Age | | Calling | |
| **Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 (Act 44 of 1969) on the day of 24.09 .2025.** | | | |

1,3,4 எதிரிகள் ஆஜர். 5 வது எதிரி ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுசப்படி மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் வெங்கமேட்டில் சந்திரன் போட்டோ ஸ்டுடியோ என்ற பெயரில் புகைப்பட கடை நடத்தி வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் எ.சா.ஆ.10 புகைப்படம் மற்றும் குறுந்தகடுகளை நான் தான் எனது கடையில் பிரிண்ட் எடுத்து குறுந்தகடில் மாற்றி 1 வது எதிரிக்கு வழங்கினேன். அதற்கான பிரிவு 63(4) (C) BSA சான்றிதழை தாக்கல் செய்கிறேன். **மேற்படி சான்றிதழ் EX. X2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் எ.சா.ஆ.11 பில் என்னால் 1 வது எதிரிக்கு வழங்கப்பட்ட பில் ஆகும்.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

1) 1 வது எதிரி பாலசுப்ரமணியை தெரியுமா என்றால் தெரியாது. புகைப்படம் பிரிண்ட் எடுக்க வந்த அன்று தான் தெரியும். எனக்கு ஏற்கனவே 1 வது எதிரியை தெரியும் என்றும், அவரை இந்த வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக அவர் கேட்டுகொண்டதன்பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/–R.Mahesh
நீதித்துறை நடுவர், கூடுதல் மகிளா நீதிமன்றம்(FAC), கரூர்.

Sd/–நாகராஜ்

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/–R.Mahesh
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்(FAC),
கரூர்.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure).**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, KARUR**
**CC .No.28/ 2023**

Deposition of Witness : DW2

| | | | |
|---|---|---|---|
| Name | ராமசாமி | Taluk | |
| Father’s Name | பாலகிருஷ்ன் | Village | |
| Age | | Calling | |
| **Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 (Act 44 of 1969) on the day of 24.09 .2025.** | | | |

1,3,4 எதிரிகள் ஆஜர். 5 வது எதிரி ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுசப்படி மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை தொடர்ச்சி**

1) அழைப்பாணையில் கோரப்பட்டுள்ள 2018 ம் ஆண்டுக்கான வருகை பதிவேட்டை writers information நிறுவனத்தில் கேட்டு கடிதம் அனுப்பியிருந்தோம். ஆனால் அந்த விவரம் எங்கள் வங்கிக்கு கிடைக்கபெறவில்லை. மேலும் கணினியில் பதிவு செய்யப்படும் எங்கள் வங்கி ஊழியரின் Log in and Log out விவரங்கள் கடைசி 6 மாதங்களுக்கு மட்டுமே எடுக்கமுடியும் என்றும் அதற்கு முந்தைய காலத்திற்கான விவரங்கள் எடுக்க முடியாது என மத்திய அலுவலகத்தில் இருந்து கூறப்பட்டுள்ளது. மேற்சொன்ன விவரங்கள் சம்பந்தமான எங்கள் வங்கி கடிதம் தாக்கல்செய்கிறேன். **மேற்படி கடிதம் Ex X1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.**

Sd/–ராமசாமி

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/–R.Mahesh
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்(FAC),
கரூர்.